நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம்,
சென்னை-5.

நொமு1/61039/97/டிபி3 நாள்: 22.8.97.

பொருள்: குடியிருப்பு - மாநகராட்சி மற்றும் நகராட்சி அலுவலர் குடியிருப்பு வாடகை குடியிருப்பை சொந்தமாக்கிட கேட்டுவரும் கருத்துரு - அறிவுரை வழங்கப்படுவது - குறித்து.

பார்வை: அரசு கடித (நிலை) எண்.183 ந.நி.ம.கு.வ. துறை சென்னை-9 நாள் 21.7.97.

---

பார்வையில் காணும் அரசாணை நகலுடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

அதில் தெரிவித்துள்ளபடி அனைத்து மாநகராட்சி மற்றும் நகராட்சி ஆணையர்கள் இனி வருங்காலங்களில் மாநகராட்சி மற்றும் நகராட்சி ஊழியர் குடியிருப்புகளை பணியில் இருக்கும் ஊழியர்களுக்கு வாடகை அடிப்படையில் மட்டுமே ஒதுக்கீடு செய்ய வேண்டும். அவ்வாறு ஒதுக்கீடு பெற்று அதில் குடியிருந்து வரும் ஊழியர்கள் பிற்காலத்தில் அதனைத் தமக்கு சொந்தமாக்கிடக் கேட்டு விண்ணப்பித்தாலோ அல்லது ஊழியர்கள் அல்லாத பிற நபர்கள் குடியிருப்புகளைச் சொந்தமாக்கிட கேட்டு விண்ணப்பித்தாலோ அதனை ஊக்குவித்து மாமன்றத்தின் முன்வைத்து தீர்மானம் இயற்றி அரசின் அனுமதிக்காக கருத்துரு ஏதும் அரசுக்கு அனுப்பக்கூடாது என்று அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இதனை கண்டிப்பாகக் கடைபிடிக்க வேண்டுமென அறிவுறுத்தப்படுகிறது.

ஒம்/- ச.ஜெயராமன்,
நகராட்சி நிர்வாக இயக்குநருக்காக.

இணைப்பு: மேற்கண்ட அரசாணை நகல்.

பெறுநர்
அனைத்து நகராட்சி ஆணையர்கள்.
அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள்.

நகல்:
கூடுதல் இயக்குநர் (எம்இசி).
'ஆர்' பிரிவு.
'டிபி3'.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

கண்காணிப்பாளர்
28/8